**<u>செய்தி வெளியீடு எண்.163</u>** **<u>நாள்.4.3.2008</u>**

# செய்திக் குறிப்பு

பொதுமக்களிடையே பேரிடர் பற்றிய விழிப்புணர்வு மற்றும் எதிர்கொள்ளும் தன்மையை ஏற்படுத்தும் பொருட்டு, புதுதில்லி தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் மற்றும் வருவாய் நிர்வாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறையும் இணைந்து, புயல் மற்றும் மழைக் காலங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து முன்மாதிரி நடைமுறை விளக்கத்தினை (Table Top Exercise) ஏற்பாடு செய்துள்ளது.

இது தொடர்பான ஒருங்கிணைப்புக் கூட்டம் கடந்த 08.10.2007 அன்று சென்னையில் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து மார்ச் 14 மற்றும் 15 தேதிகளில், காஞ்சீபுரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் இது தொடர்பான ஒத்திகையும் நடைபெற உள்ளது.

மாநில மற்றும் மாவட்ட அளவில் பேரிடர் காலங்களில் விழிப்புணர்ச்சி மற்றும் ஆயத்த நிலைகளை அறிவதே இம்மாதிரிப் பணியின் நோக்கமாகும். தமிழ்நாடு அரசின் பேரிடர் மேலாண்மை தொடர்பான அனைத்து துறைகளும் பேரிடர் காலங்களில், நிலவிடும் சூழ்நிலைகளை செம்மையாக எதிர்கொள்ள ஆயத்தப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் ஏற்பட்ட பேரிடர் அனுபவங்களிலிருந்து, பேரிடர்களை எவ்வாறு எதிர்கொள்வது மற்றும் திறம்பட மேலாண்மை செய்வது குறித்து, பேரிடர் மேலாண்மை திட்டமானது வகுக்கப்பட்டுள்ளது. அண்மையில் வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்புகளை திறம்பட கையாண்டது, தமிழ்நாடு அரசு பேரிடர்களை எதிர்கொள்ளும் திறனுக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

இன்று 04.03.2008 காலை 10.30 மணியளவில் சென்னை பிரீஸ் ஹோட்டலில் நடைபெற்ற முன்மாதிரி நடைமுறை விளக்கம் தொடர்பான (Table Top Exercise) கருத்தரங்கினை நிவாரண ஆணையர் மற்றும் சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் திரு. சக்திகாந்த தாஸ், இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்கள். தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் முதுநிலை துறை வல்லுநர் (பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு)

மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர் பிரிகேடியர் டாக்டர் பி.கே. கன்னா, இந்நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்புரை நிகழ்த்தினார். இணை ஆணையர் (நில வருவாய்) திரு. அ. இராமலிங்கம், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி ஆர். ஜெயா அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

இந்நிகழ்ச்சியில் திரு. சி.வி. சங்கர், இ.ஆ.ப., சிறப்புப் பணி அலுவலர் (நிவாரணம் மற்றும் மறுவாழ்வு), திரு. ஷ்யாம் சுந்தர், இ.கா.ப., கூடுதல் காவல்துறை தலைவர் (தீயணைப்பு மற்றும் மீட்புத்துறை), திரு. டி. இராதாகிருஷ்ணன், இ.கா.ப., இயக்குநர், ஊர்க்காவல்படை, காஞ்சீபுரம் மாவட்ட ஆட்சியர் திரு. சந்தோஷ் கே. மிஸ்ரா, இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர். புதுச்சேரி மாநிலத்தின் சார்பில், மாவட்ட ஆட்சியர் திரு. தேவநிதி தாஸ் மற்றும் உயர் அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

மேலும், மருத்துவத்துறை, வேளாண்மைத்துறை, மீன்வளத்துறை, குடிமைப் பொருள் வழங்கல் துறை, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் நகராட்சி நிர்வாகம் ஆகிய துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் பங்கேற்றனர்.

*********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.